**கந்தளாய் பிரதேச சபை**

**திருகோணமலை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 யூலை 04 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 யூன் 30 ஆந் திகதியன்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2017 செப்டம்பர் 26 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர நிதிக்கூற்றுக்களில் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கந்தளாய் பிரதேச சபையின் நிதி நிலமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையை வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முந்நூற்று எண்பத்தைந்து நூலகப் புத்தகங்களது பெறுமதியாகிய ரூபா 123,905 கணக்கிலிடப்படவில்லை.

(ஆ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 262,228 நிதிக்கூற்றுக்களில் ரூபா 204,960 ஆகக் காட்டப்பட்டமையால் நடைமுறைப் பொறுப்புகள் ரூபா 57,268 குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

#### 1.3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயகக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| நிதிப்பிரமாணம் 396 | வழங்கப்பட்டு, 06 மாதங்களைக் கடந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் ரூபா 216,524 பெறுமதியான 08 காசோலைகள் |

சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) 1989 ஏப்ரல் 17 ஆந் திகதிய 554/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1988 பிரதேச சபைகள் (நிதியும் நிர்வாகமும்) விதிக் கோவை

| | |
|---|---|
| (i) 141 ஆம் விதி | 2016 ஆம் ஆண்டிற்கென வைப்புப் பேரேடு பேணப்படவில்லை. |
| (ii) 217 ஆம் விதி | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 2,959,735 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 90,206 ஆகும். இதற்கமைய, நிதிப் பெறுபேற்றில் ரூபா 2,869,529 சாதகமான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வாடகை வருவாய் ரூபா 3,473,533 அதிகரித்தமையே மீளாய்வாண்டில் நிதிப் பெறுபேறு ரூபா 2,869,529 அதிகரிப்பதற்கான பிரதான காரணமாகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 வருவாய் சேகரிப்பிலான செயலாற்றல்

(அ) செயலாளரால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2016 ஆம் ஆண்டு | | |
|---|---|---|---|
| **வருவாய்க்கான விடயம்** | **மதிப்பிடப்பட்ட வருவாய்** | **உள்ளவாறான வருவாய்** | **டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை** |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| தீர்வையும் வரியும் | 2,800 | 3,607 | 9,573 |
| குத்தகை வாடகை | 7,730 | 6,512 | 1,959 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,103 | 915 | - |
| ஏனைய வருவாய் | 45,648 | 38,631 | 9,080 |

### 2.2.2 முத்திரைக் கட்டணம்

கிழக்கு மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்து 2015, 2016 ஆம் ஆண்டுகளுக்கான முத்திரைக் கட்டணத்தை பெறுவதற்கான நடவடிக்கை 2017 யூலை 18 ஆந் திகதியளவிலும் மேற்கொள்ளப்படவில்லை.

### 2.2.3 தீர்வையும் வரியும்

சபையின் அதிகாரத்துக்குட்பட்ட 06 தீர்வைப் பிரிவுகளின் 182 கூறுகளில் ரூபா 3,540,683 தீர்வையை அறவிடுவதற்கு 2017 யூலை 18 ஆந் திகதியளவிலும் சபையால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பெற வேண்டிய கடை வாடகையாகிய ரூபா 1,917,004 ஏறக்குறைய 06 ஆண்டுகளாக நிலுவையாக இருந்ததுடன், அதனை அறவிடுவதற்கு அல்லது சட்டபூர்வ நடவடிக்கையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ஆ) பிரதேச சபையில் பணியாற்றும் 08 சுகாதாரத் தொழிலாளர்களுக்கும் 03 களஞ்சியத் தொழிலாளர்களுக்கும் கடமை நிரல் (Duty List) வழங்கப்படவில்லை. இதன் காரணமாக, அவர்கள் ஆற்றும் பணியைச் சரிவர உறுதி செய்வதற்கும் பணியை நிறைவேற்றுகையில் கட்டுப்பாட்டை பேணுவதற்கும் இயலாதிருந்தது.

(இ) பிரதேச சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள வீதி விளக்குகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றை பழுதுபார்ப்பது தொடர்பான தகவல்களை அறவிக்கும் பதிவேடு ஒன்று பேணப்படாமையால் வீதி விளக்குகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பான கட்டுப்பாட்டைப் பேண முடியாதிருந்தது.

(ஈ) சபையில் பணியாற்றி, சேவையிலிருந்து விலகிய, சேவையிலிருந்து நீக்கப்பட்ட 03 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் ரூபா 1,205,400 ஆகும். இதனை தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தினது 4 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) சபைக்குச் சொந்தமான 13 வாகனங்களது நடப்பாண்டிற்கான வருவாய் அனுமதிப்பத்திரக் கட்டணம் பெறப்படவில்லை.

(ஊ) நிதிப்பிரமாணம் 1645 க்கமைய, பயன்படுத்தப்பட்டவாறிருக்கும் 10 வாகனங்களது நாளாந்த ஓட்ட அட்டவணைகள் முறைப்படி பேணப்படவில்லை.

(எ) 1993 நவெம்பர் 18 ஆந் திகதியன்று நகர அபிவிருத்தி அதிகார சபையால் வெளியிடப்பட்ட 15 ஆம் இலக்கத் திட்டமிடல் சுற்றறிக்கையின் பிரகாரம் அத்துமீறிய நிர்மாண வேலைகளுக்கான சேவைக் கட்டண அறவீட்டை இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிப்பதன் மூலம் அக்கணக்கில் செலவு வைக்க வேண்டுமாயினும், சபையால் பொது வைப்புக் கணக்கில் ரூபா 959,350 வைப்பிலிடப்பட்டிருந்தது.

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

மனிதவள முகாமைத்துவம் தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சபையின் பின்வரும் பதவிகளுக்கு அங்கீகரித்த எண்ணிக்கையை விட அதிக ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

| பதவியின் தன்மை | அங்கீகரித்த எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|
| முகாமைத்துவ உதவியாளர் | 10 | 11 | 01 |
| சாரதி | 06 | 08 | 02 |
| சிற்றூழியர் | 03 | 04 | 01 |
| காவலாளி | 03 | 06 | 03 |
| நூலகச் சேவை உதவியாளர் | 02 | 03 | 01 |
| மொத்தம் | 24 | 32 | 08 |

(ii) சாரதிகள் மற்றும் நூலகச் சேவை உதவியாளர்கள் பதவிகளில் கூடிய எண்ணிக்கையானோர் இருக்கையில் அப்பதவிகளுக்குச் சமயாசமய ஊழியர்களும் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(iii) அபிவிருத்தி உத்தியோகத்தர், வருவாய் பரிசோதகர், இயந்திர நடத்துனர், வேலைப் பரிசோதகர் பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2017 யூலை 18 ஆந் திகதியளவிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) பிரதேச சபைக்குரிய பொதுச் சந்தையில் உள்ள 66 கடைகள் மற்றும் பஸ் தரிப்பிடத்தில் உள்ள 24 கடைகள் என்பவற்றினது நிர்மாண வேலை நகர அபிவிருத்தி அதிகார சபையால் நிறைவேற்றப்பட்டு 2013 மார்ச் 27 ஆந் திகதி பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின்போது பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) பொதுச் சந்தையில் 1-6 வரையான கடைகள் புடவை விற்பனைக்கும் 6-12 வரையான கடைகள் சில்லறைப் பொருட்களுக்கும் 13-25 வரையான கடைகள் மரக்கறி வகைகளுக்கும் 26-35 வரையிலான கடைகள் பழங்களுக்கும் என் வெவ்வேறாக குத்தகைக்கு வழங்கப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய, பெறப்பட்ட அதி கூடிய கேள்விகள் நிராகரிக்கப்பட்டு குறைந்த கேள்விகளுக்கே கடைகள் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அவ்வகையான வகைப்படுத்தலுக்கமையக் கடைகள் வழங்கப்பட்டிராததுடன், குறைந்த விலைக்கு கடைகள் வழங்கப்பட்டமையால் மாதாந்தம் சபைக்கு ஏற்பட்ட இழப்பு ஏறக்குறைய ரூபா 60,000 ஆகும்.

(ii) பொதுச் சந்தையில் உள்ள மேல் மாடிக்குச் செல்வதிலுள்ள வசதியின்மை, அக்கடைகளுக்கான வைப்புத் தொகை அதிகரிப்பு மற்றும் அத்துமீறியவாறு கடைகள் நடாத்தப்பட்டமை என்பன காரணமாக 26 கடைகளை வாடகைக்கு வழங்க முடியாது அவை பயனற்றிருந்தன. இதனால் சபைக்கு வருடாந்தம் ஏற்பட்ட இழப்பு ஏறக்குறைய ரூபா 600,000 ஆகும்.

(iii) பஸ் தரிப்படக் கடைகளுக்கு வைப்புத் தொகையை வழங்கியவர்களுக்கு 2017 மே மாதத்தில் கடைகள் வழங்கப்பட்டிருந்தபோதும், மின்சாரம் வழங்கப்படாமையால் வியாபார நடவடிக்கை 2017 யூலை 18 ஆந் திகதியளவிலும் ஆரம்பிக்கப்படாதிருந்தது. இதன் காரணமாக, யூன் மாத வாடகையாகிய ரூபா 95,800 இழப்புக்குள்ளாகியது.

(iv) பஸ் தரிப்பிடக் கடைகளது நிர்மாண வேலைகள் யாவற்றையும் நிறைவேற்றி அவற்றை ஒப்பந்தகாரர் 2013 மார்ச் 27 ஆந் திகதி சபையிடம் சமர்ப்பித்திருந்தபோதும், சபை அக்கடைகளுக்குப் போதிய பாதுகாப்பு வழங்காமையால் ஏறக்குறைய ரூபா 102,000 பெறுமதியான மின்சாரத் துணைப்பாகங்கள் பழுதடைந்ததுடன் அவற்றை மீளப் பொருத்துவதற்குச் சபை மேலதிக செலவினத்தை மேற்கொள்ள வேண்டி நேரிட்டது.

(ஆ) பிரதேச சபையின் அக்போபுர நூலகத்திற்குப் புதிய புத்தகங்களைப் பெறுவதற்கு, அங்கத்தவர்களது எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அல்லது நூலக நடவடிக்கை மேம்பாட்டிற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன், புத்தகங்களை பெறுவதற்காக மாதாந்தம் 5-10 எண்ணிக்கையிலான அங்கத்தவர் வருகை தருவதுடன், அங்கத்தவர் இடாப்பின் பிரகாரம் கடந்த 03 ஆண்டுகளில் 13 அங்கத்தவர்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுமிருந்தனர். எவ்வாறாயினும், நூலகத்தைப் பேணுவதற்கு 04 ஊழியர்கள் இருந்தபோதும், நூலகத்தின் மூலம் பிரதேச மக்களுக்கு ஆக்கபூர்வமான சேவை கிடைக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(இ) கந்தளாய் பிரதேச சபைக்குச் சொந்தமான வென்ராயன்புர ஆயுர்வேத வைத்திய நிலையத்தில் 2016 ஆம் ஆண்டில் நாளாந்தம் சராசரி 10 நோயாளிகள் சிகிச்சை பெற்றிருந்தனர். எனினும், உள்ளூராட்சித் திணைக்களத்தால் சிகிச்சை வழங்கப்படும் நோயாளர்களது எண்ணிக்கையைக் கருத்திற் கொள்ளாது அங்கீகரிக்கப்பட்ட 2 மருத்துவர்களையும் 2 மருந்தாளர்களையும் பணியிலமர்த்தியமையால் அவர்களது ஆக்கபூர்வமான சேவையைப் பெற முடியாது போனது.

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

**3.4.1 பலநோக்குக் கட்டிடத்தை நிர்மாணித்தல்**

2014 மார்ச் 18 ஆந் திகதியன்று ரூபா 51,093,960 பெறுமதியான பலநோக்குக் கட்டிடத்திற்கான ஒப்பந்தத்தைச் சபை முதற்கட்ட வேலைகளுக்கென வழங்கியிருந்தது.

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பலநோக்குக் கட்டிடத்தில் Infloor Slab மற்றும் Infloor beam என்பவற்றை நிர்மாணிப்பதற்குப் பயன்படுத்திய Plywood Shutter நியமத்திற்கேற்ப இருக்கவில்லை. பழையவற்றை உபயோகித்தமையால் slab இன் மேற்பக்கம் செம்மையாக அமையவில்லை. எனினும், இவ்வேலை திருப்திகரமாக நிறைவேறியதாகச் சிபார்சு செய்யப்பட்டு ரூபா 10,463,048 கொடுப்பனவு செய்யப்பட்டிருமிருந்தது.

(ஆ) Slab இன் மேற்பக்கம் மட்டுப்படுத்தப்பட்டு மை பூசுவதற்கு மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 312,650 ஆகும். எனினும், slab முறையாக நிறைவேறாமையால் மட்டுப்படுத்த முடியாதிருந்தது. இதன் பொருட்டு சீலிங் பொருத்தப்பட்டிருந்தபோதும், அதற்கு ரூபா 1,046,750 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலதிகக் கிரயத்தை முதலாவது ஒப்பந்தகாரரிடம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.4.2 பிரதேச சபைகளைச் சக்திமிக்கதாக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்திட்டங்களை அமுலாக்குதல்

குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில் சபை ஆரம்பித்த ரூபா 2,677,008 கூட்டுத் தொகை மதிப்பீட்டுப் பெறுமதியுடனான பொதுச் சந்தையின் வாகனத் தரிப்பிடத்தில் கொங்கிறீட் கற்களை இடுதல், 93 ஆம் சந்தியில் வாரச் சந்தையைப் பழுதுபார்த்தல் மற்றும் கந்தளாய் குளக்கட்டினருகே உள்ள பொதுக் கழிவறையைப் பழுதுபார்த்தல் ஆகிய செயற்திட்டங்கள் சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கந்தளாய் பொதுச் சந்தையின் வாகனத் தரிப்பிடத்தில் கற்களை இடுவதற்கு ரூபா 1,148,500 மதிப்பீட்டுப் பெறுமதியிலான வேலை ஆரம்பமாகி 534 சதுர மீட்டருக்கு மாத்திரமே கற்கள் இடப்பட்டிருந்ததுடன், ஏறக்குறைய 365 சதுர அடிக்கு கற்கள் இடப்பட வேண்டிய நிலையில் 2017 யூலை 18 ஆந் திகதியளவிலும் வேலை நிறைவேறாதிருந்தது.

(ஆ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 01/2016 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 4.1 மற்றும் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுலாக்கப்படுகின்ற நிர்மாண வேலைச் செயற்திட்டத்திற்குத் தொழிலாளர்களையும் உபகரணங்களையும் சபை வழங்க வேண்டுமாயினும், அதற்கு முரணாக 93 ஆம் சந்தி வாரச் சந்தையைப் பழுதுபார்த்தல் வேலைக்கு சமுதாயஞ்சார் சபை ஒன்றிற்கு 2016 ஆகஸ்ட் 10 ஆந் திகதி ரூபா 999,224 பெறுமதியான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இதன் பொருட்டு சமுதாயஞ்சார் சபைக்கு ரூபா 436,074 வழங்கப்பட்டிருந்தபோதும், 2017 யூலை 18 ஆந் திகதியளவிலும் வேலை நிறைவேறாதிருந்தது.

(இ) இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கந்தளாய் குளக்கட்டினருகே உள்ள பொதுக் கழிவறையை பழுதுபார்ப்பதற்கு ரூபா 529,284 மதிப்பீட்டுப் பெறுமதியில் வேலை ஆரம்பிக்கப்பட்டது. சுவர்கள் அமைக்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்டபோதும், நீரைப் பெறுவது மற்றும் கழிவறையினுள்ளே வேலை நிறைவேறுதல் என்பன 2017 யூலை 18 ஆந் திகதியளவிலும் நடைபெறாதிருந்தது.

### 3.5 சுற்றாடல் பிரச்சினைகள்

#### சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம், எரிபொருள் நிரப்பும் நிலையங்கள், சீமெந்து வேலை, தச்சு வேலை, கராஜ், நெல்லரைக்கும் ஆலைகள் என்பவற்றை நடாத்தும் தொழில் முயற்சியாளர்கள் நகர சபையிடமிருந்து சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை பெற வேண்டும். எவ்வாறாயினும், தொழில் முயற்சியாளர்கள் அவ்வாறான அனுமதிப் பத்திரங்களைப் பெறாது மேற்குறித்த முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். இதனால் விளையக்கூடிய சுற்றாடல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சபை தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

**3.6 கணக்கீட்டு நடவடிக்கைத் தன்மையும் சொத்து முகாமைத்துவமும்**

**சொத்து முகாமைத்துவம்**

**(அ) குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) 1997 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட வேன் ஒன்று 2013 டிசெம்பர் தொடக்கமும் 1987 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட டிறக்டர் ஒன்று 2011 டிசெம்பர் தொடக்கமும் 2008 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட கெப் வண்டி ஒன்று 2015 யூன் மாதம் தொடக்கம் செயற்படாது வாகனக் குழாமில் தரித்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பழுதுபார்த்துப் பயன்படுத்துவதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கை 2017 யூலை 18 ஆந் திகதியளவிலும் மேற்கொள்ளப்படாதிருந்தது.

(ii) பிரதேச சபையால் இலங்கை தகவல் ஊடக தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட நெனசல கணனி நிலையம் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் மூடப்பட்டிருந்தது. இதன் காரணமாக, அதற்கெனப் பெறப்பட்ட கணனிகள், தளபாடங்கள், ஏனைய உபகரணங்கள் என்பன பயன்படுத்தப்படாதிருந்தன. இதனால், கிராமியச் சிறுவர்கள் ஊடகத் தொழில்நுட்ப அறிவைப் பெற முடியாதிருந்தது.

**(ஆ) பொருட் கணிப்புச் சபை அறிக்கையினது சிபார்சுகளை அமுலாக்குதல்**

2017 மார்ச் 25 ஆந் திகதி நடைபெற்ற பொருட் கணிப்புச் சபை அறிக்கையின் பிரகாரம் பழுதுபார்ப்பதற்கெனச் சிபார்சு செய்யப்பட்ட 07 வகைப் பொருட்களைப் பழுதுபார்ப்பதற்கும் விற்பனைக்கெனச் சிபார்சு செய்யப்பட்ட 28 வகைப் பொருட்களை விற்பனை செய்வதற்கும் அப்புறப்படுத்துவதற்குச் சிபார்சு செய்யப்பட்ட 10 வகைப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்கும் 1316 புத்தகங்களை அகற்றுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் 2017 யூலை 18 ஆந் திகதியளவிலும் மேற்கொளளப்படவில்லை.

**3.7 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

சபைகளின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் மாதாந்தம் ஏறக்குறைய 150 தொன் கழிவுப் பொருட்கள் அப்புறப்படுத்தப்படுகின்றன. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பரிந்துரைக்கேற்ப கழிவுப் பொருட்கள் வெவ்வேறாக அகற்றப்பட்டோ அல்லது அழிவுக்குள்ளாதிருககும் கழிவுப் பொருட்களை நசுக்கி அவற்றை மண்ணால் மூடிவிடுவதோ நடைபெறாமையால் அப்பிரதேசத்தில் சஞ்சரிக்கும் காட்டு யானைகள் கழிவுப் பொருட்களை உணவாகக் கொண்டு அதன் மூலம் அவை அவற்றிற்கு ஊறு விளைவிப்பதாக உள்ளது. எவ்வாறாயினும், கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கென மஹாவலி அதிகாரசபையால் 12 ½ ஏக்கர் காணி சூரியபுர எனும் இடத்தில் வழங்கப்பட்டுள்ளதுடன், அவ்விடத்தில் மின் வேலியை அமைத்து முறைப்படி கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை 2017 யூலை 18 ஆந் திகதியளவிலும் சபை மேற்கொள்ளாதிருந்தது.

**4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமை | கவனம் மேற்கொள்ளப்பட வேண்டிய துறை |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) கணக்கீடு, |
| | (ii) துணைப் பதிவேடுகளைப் பேணுதல் |
| (ஆ) வருவாய் நிர்வாகம் | வருவாய் நிலுவையை அறவிடுதல், |
| (இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) சொத்துப் பதிவேட்டைப் பேணுதல் |
| | (ii) பயன்படுத்தப்படாத சொத்துக்களை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல். |
| (ஈ) ஒப்பந்த நிர்வாகம் | (i) ஒப்பந்தத் தொகையைக் கொடுப்பனவு செய்தல். |
| | (ii) உடன்படிக்கைப் பிரகாரம் பணி நிறைவேறியதன் பின்னர் கொடுப்பனவைச் செய்தல். |
| (உ) மனிதவள முகாமைத்துவம் | மேலதிக ஊழியர்களை ஆட்சேர்த்தமை. |